தமிழ்ப் பெண் கவிஞர் படைப்புகளில் பெண்ணியம்

திருமதி செ. பத்மாவதி
தமிழ்த்துறை
நாசரேத் மர்காசுஸ் கல்லூரி பிள்ளையன்மனை

முன்னுரை

பெண்ணின் மீது அதிக அக்கறை கொண்ட இலக்கியக் கோட்பாடுகளுள் ஒன்று பெண்ணியம். பெண்ணியக் கோட்பாடு இந்தியாவில் சிறப்பாகத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றன. தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண் கவிஞர் படைப்புகளில் இடம் பெற்றிருக்கும் பாங்கினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பெண்ணியம்

உலகப் புதுமைகளின் முன்னோடியாகத் திகழும் பிரெஞ்சு நாட்டிலிருந்து தோன்றிய பெண்ணியம் என்ற கருத்துருவும் சொல்லாக்கமும் பெண்களை எழுச்சி பெறத் தூண்டுவனவாகும். பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளையும், அடக்கும் வழிகளையும் அறிந்து கொண்டு அவற்றில் பெண்கள் விடு படுவதற்கான வழிமுறைகள்பற்றியவற்றைப்பெண்களுக்கு அடையாளங்காட்டுவதாகும். குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல், மதம், பண்பாடு ஆகிய நிலைகளில் பெண்கள் மீது இழைக்கப்படும் ஒடுக்கு முறைகளினின்று அவர்களை விடுதலை பெறத் தூண்டுவதற்காகப் பெண்ணியம் அமைகின்றது. பெண்ணின் பிறப்பிலிருந்து தொடங்கி இறக்கும் வரையிலும் எல்லாப்படி நிலைகளிலும் உரிமையற்ற சார்ப்புப் பொருளாகவே பெண்களை ஆண் சமுதாயம் கருதுகிறது.

இந்தியப் பெண்ணியம்

இந்தியாவில் பெண்ணியம் என்பது சமூக சீர்திருத்தம், பெண் கல்வி, பெண் விடுதலை, ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்துகளின் அடிப்படையில் தோன்றி வளர்ந்தது. சாதி ஒழிப்பு, குழந்தைமண எதிர்ப்பு, விதவை மறுமணம், தேவதாசி முறை ஒழிப்பு, பெண்கல்வி போன்ற பெண் விடுதலைக்காகப் பேசப்பட்டன. பின்னர் காந்தியடிகள், பாரதியார், திரு.வி.க. பாரதிதாசன், பெரியார் பெண்விடுதலைக்காக போராடினார்கள்.

தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண்ணியம்

பெண்ணியக் கோட்பாடுகள் மேலை நாட்டில் தோன்றி வளர்ச்சி பெற்று உலக நாடுகளில் பரவி வருகின்றன. இக்கோட்பாடுகள் படைப்பாளர்களால் பின்பற்றப்பட்டு அவர்தம் படைப்புகளில் முதன்மையாக்கப்படுகின்றன. தமிழகத்தில் பல்வேறு படைப்பாளர்கள் பல்வேறு தாக்கங்களைக் கொண்டவர்களாகச் செயல்படுகின்றன. தமிழ்ப் புதுக்கவிதையில் நவீன படைப்பாளர்களிடம் பெண்ணியம் குறிப்பிடத்தகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ப்பெண் புதுக்கவிஞர்களின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனை எங்ஙனம் இடம் பெற்றிருக்கிறது என்பதையே முதன்மையாகக் காணுகிறது.

ஆற்றல்

பெண் மென்மையானவள். அவள் ஆணைக் காட்டிலும் பலவீனமானவள் என்று பெண்ணைப் பற்றிப் பொதுவாக பேசுகின்றனர். இக்கூற்றைப் பெண்ணியலாளர்கள் மறுக்கின்றனர். உறுதியாகச் செயல்படும் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மிகுதியான ஆற்றல் உண்டு என்று பறை சாற்றுகின்றார்கள். இனிமேலும்,

நளன்களையும் துசு'யந்தர்களையும்
நம்பத்தயாராயில்லை நாங்கள்!
இலட்சுமணர்களுக்கெல்லாம்
ஒரு வேண்டு கோள்
தயவு செய்து
சீதைகளுக்கு யாரும்
கோடு கிழிக்காதீர்கள்
இராவணன் வந்தால் எதிர்க்க
இன்று அவர்களே
தயாராகத்தான் இருக்கிறார்கள்!
மண்ணிலிடும் கோட்டை விட
மனதிலிடும் கோடுதானோ சிறந்தது.

- நிர்மலா சுரேஷ்

பெண்களுக்கு பாதுகாப்பு ஆண் இல்லை. தாங்களே என்ற மனப்பான்மையின் உரத்த குரல் பெண்ணியச் சிந்தனையாக வெளிப்படுகின்றது.

திருமணம்

இருமனங்களின் கூட்டு இயைவு திருமணம். இவ்வுறவு ''ஆயிரம் காலத்துப் பயிர்'' என்று பேசப்படும். புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல் என்ற இரண்டும் சரியாக இருந்தால் மண வாழ்க்கை இனிமையாய் அமையும்.

புரிந்து கொள்ளுதலில்
தொடங்கி
மதித்து நடத்தலில்
வளர்ந்து
பகிர்ந்து கொள்ளுதலின்
தொடர்கிற
பந்தம் தான் இது. - உமா மகேஸ்வரி

இக்கவிதை திருமண உறவு எப்படி இருக்க வேண்டுமென கூறுகிறது.

தனித்திருத்தல்

பெண்ணின் வாழ்க்கையில் சந்திக்கின்ற துயரங்களில் வரதட்சணைக் கொடுமையும் ஒன்று. வரதட்சணைக் கொடுமை வறுமையுடன் சேர்ந்து கொண்டால் பெண்ணின் வாழ்வில் இன்பம் என்ற ஒன்று இராது. வரதட்சணைக் கொடுமை, வறுமை ஆகியன சேர்ந்து கொள்வதால் வெளிப்படுகின்ற பெண்ணியச் சிந்தனை.

''எங்களின் சௌபாக்கியம்
மஞ்சள் பு மரத்தடியில்
இலுப்பையில் எண்ணெய் உண்டு
இரைப்பையை நிரப்பிடுவோம்''

என்று அமைகின்றது.

ஆணும் பெண்ணும் சமம்

''ஆணுக்குப் பெண் இளைப்பில்லைகாண்'' என்று மகாகவி பாரதியார் முழக்கமிட்டார். ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் அமைவதை பாரதி போன்றோர் எதிர்த்தனர்.

சீதைக்கு மட்டுமா
அக்கினிப் பரீட்சை?
ராமனே
குற்றவாளியாகும் போது
அவனுக்கு உரிமை ஏது?
தராசுத் தட்டுகள்
சமமாக நிற்கட்டும்
நீதியின் விழிகளுக்குப்
புட்டு எதற்கு?

''அக்கினிப் பரீட்சைசுசு என்ற சோதனை சீதைக்கு மட்டுமன்று இராமனுக்கும் தான். பெண் மீது மட்டும் குற்றம் கூற ஆணுக்கு உரிமை இல்லை. இருவருக்கும் சம நீதி வழங்கப்பட வேண்டும். பெண்ணுக்கு அநீதி இழைக்கப்படுவதை எதிர்க்கின்ற பெண்ணியக் குரலாகக் கவிஞரின் கவிதை அமைகிறது.

மரபை உடைத்தல்

ஆணுக்குப் பெண் அடிமை. ஆணுக்காகவே பெண் படைக்கப்பட்டிருப்பவள். ஆணுடைய கருத்தே பெண்ணுடையது. குற்றமென்பது பெண்ணுக்கு மட்டுமே உரியது என்ற கருத்துக்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட பிழை மரபு.

கற்புக்காய் கண்ணீர் வடிக்க
நான் ஒன்றும் கண்ணகியல்ல
மானத்தை நினைத்து நிற்க,
நான் ஒன்றும்
இழக்கவில்லை
தற்கொலையில் உயிரைமாய்க்க
நான் ஒன்றும் கோழையல்ல.

என்ற குரல் மரபை உடைக்கின்ற வகையில் எழுகிறது.

பெண்ணை நுகர்வுப் பொருளாகப் பார்க்க உதவுகின்ற அழகு படுத்தலைப் பெண்ணியச் சிந்தனையாளர்கள் எதிர்க்கின்றனர்.

என் இனிய தோழிகளே
இன்னுமா தலைவார
கண்ணாடி தேடுகிறீர்
அழகுக் கோலம் புனைவது ஆண்களுக்காக
என்று வெளிப்படுகிறது.

முடிவுரை

மேனாட்டு இலக்கியக் கோட்பாட்டு வகைகளில் ஒன்று பெண்ணியக் கோட்பாடு. இக்கோட்பாடு படைப்பாளிகளைப் பெரிதும் தாக்கங்களுக்கு உட்படுத்தி இருக்கின்றது. இந்திய நாட்டின் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப பெண்ணியக் கருத்து பெண் கவிஞர்களின் படைப்புகளில் பிரதிபலிக்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.